Registered as a Newspaper

பக்கங்கள் 6

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 10 | 26-11-94 | சனிக்கிழமை | ஓசை 281

## மீன்பிடி தடையை நீக்கக்கோரி மன்னார் செயலகம் முன் மறியல்

மன்னார் கடலில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்க கோரியும், பட்டினிச் சாவிலிருந்து தங்களைக் காப்பாற்றுமாறு கோரியும் மன்னார் தீவின் பல்வேறு இடங்களிலும் வாழும் மீனவர்கள் நேற்றுமுன் தினம் மன்னார்க் கச்சேரிக்கு முன் மறியல் போராட்டமொன்றை நடத்தினர். கடந்த மூன்று மாதங்களாக அமுலில் இருக்கும் மீன்பிடிக்கத் தடையினால் 6500 மீனவர் குடும்பங்கள் வருவாய் எதுவுமின்றி கஷ்டப்படுவதாகவும் மறியல் போராட்டத்தில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# நினைவொலி எழுப்பலுடன் மாவீரர் நாள் ஆரம்பமாகும்

## மாலை மாபெரும் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் விடிவிற்காய் தமதுயிரீந்த மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் இன்று நள்ளிரவுக்கு சற்றுப் பின்னர் சரியாக 12 மணி ஒரு செக்கனுக்கு மாவீரர் நினைவொலி எழுப்பலுடன் ஆரம்பமாகும் இரண்டு நிமிட மௌன வணக்கத்தைத் தொடர்ந்து சரியாக 12 மணி இரண்டு நிமிடத்திற்கு மாவீரர் நினைவாக சுடரேற்றல் ஆரம்பமாகும் நாளை மாலை மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெறும்

தேசத்தின் விடிவிற்காய் தம்முயிரீந்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் நிகழ்வுகள் இன்று நள்ளிரவுசற்றுத்தாண்டியதும் சரியாக 12 மணி ஒரு செக்கனுக்கு மாவீரர் நினைவொலி எழுப்பலுடன் ஆரம்பமாகவுள்ளது. அவ்வேளையில் தமிழீழ மக்கள் அனைவரும் எழுந்து நின்று 2 நிமிடநேரம் மௌன வணக்கம் செலுத்தவுள்ளனர் இச் சந்தர்ப்பத்தில் நடந்து செல்பவர்கள், வாகனங்களில் செல்வோர் அனைவரும் தரித்து நின்று அமைதிவணக்கத்தில் பங்கேற்கவுள்ளனர்.

சரியாக 12 02 நிமிடத்திற்கு மாவீரர் நினைவொலி நிறைவு பெற மாவீரர் சுடரேற்றல் நிகழ்வுகள் ஆரம்பமாகும் மாவீரர் துயிலுமில்லங்களிலும், பொது இடங்களிலும், பணிமனைகளிலும் இல்லங்களிலும், வணிக நிலையங்களிலும் மக்கள் திரண்டி

(6ஆம் பக்கம் பார்க்க)

வலிகாமம் மாவீரர் துயிலுமில்ல

## ஈகச்சுடரேற்றல் நிகழ்வு ஒழுங்கமைப்பு அறிவிப்பு

வலிகாமம் மாவீரர் துயிலும் இல்ல ஈகச்சுடர் ஏற்றல் நிகழ்வு ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செய்திகுறிப் பொன்றை வெளியிட்டுள்ளார். இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் தமிழீழ மக்கள் அனைவரும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கை பேணி நடந்துகொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவீரர் நாளில் அதிகாலை 12 01 ற்கு மாவீரர் துயிலும் இல்லத்தில் ஈகச்சுடர் ஏற்றும் நிகழ்வினைச் சிறப்பிக்கும் வகையில் போக்குவரத்து ஒழுங்குகளும், துயிலும் இல்ல ஒழுங்குகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மாவீரர் கல்லறைகளிற்கும் நினைவுக்கற்களிற்கும் அஞ்சலி செலுத்துவதற்கு போராளிகளும், பொதுமக்களும் 26ம் திகதி இரவு 8 00 மணிவரை அனுமதிக்கப்படுவர். அதன் பின் நினைவுக்கற்கள் கல்லறைகள் கொண்ட தொகுதிக்குள் மாவீரர் பெற்றோர்கள் வந்து சேருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் மாவீரர்களின் பெற்றோர்கள் கல்லறைகளிற்கும், நினைவுக் கற்களிற்கும் அஞ்சலி செலுத்துவதற்கான நிலைக்கு வந்த பின்னரே இரவு 11-30 மணிக்குப் பின்பு போராளிகளும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளி. அரச அதிபராகவும் பொன்னம்பலம் கடமை

(கொழும்பு)

திரு. பொன்னம்பலம் தற்போது யாழ் அரச அதிபராகவும் கிளிநொச்சி அரச அதிபராகவும் செயற்படுவதாக தகவல் துறையமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

இராணுவம் விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்தை மீறி செயற்பட்டதாக பிரபாகரன் குற்றஞ்சாட்டியுள்ளார் என பத்திரிகையாளர் அமைச்சரைக் கேட்டபோது அதுபற்றி உத்தியோகபூர்வமாக எமக்கு அறிவிக்கவில்லை என அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா மேலும் தெரிவித்தார்.

## பருத்தித்துறை இறங்குதுறை பலத்த சேதமடைந்தது

பருத்தித்துறை இறங்குதுறைப்பகுதி பலத்த சேதமடைந்துள்ளது. இதனால் இறங்குதுறைப்பகுதி குன்றும் குழியுமாகக் காணப்பட்டது.

கடந்த இரண்டு தினங்களாக கடலில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பையடுத்து இறங்குதுறை சேதமடைந்தது. கடந்த வருடமும் இப் பகுதி சேதமடைந்து அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட போதிலும் மீண்டும் சேதமேற்பட்டுள்ளது. (யோ)

## பொருள்கள் இறக்கல் 2-வது நாளாகத் தடை

[வடமராட்சி]

'குமண' கப்பல் கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு மட்டக்களப்பு பகுதியைத் தாண்டி திருகோணமலையில் தரித்து நிற்கிறது. கடல் கொந்தளிப்பு சீரானதும் காங்கேசன்துறை நோக்கி வரும். இக்கப்பல் பருத்தித்துறை வந்ததும் விதை உருளைக் கிழங்குகள் உடன் இறக்கப்படும்.

நேற்றுடன் இரண்டு தினங்களாக கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் தடைப்பட்டன. சீரற்ற காலநிலை தொடருமானால் திங்கட்கிழமையே கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

'மாகோ' கப்பலும் தண்ணீர் நிரப்புவதற்காக திருகோணமலை செல்லவுள்ளது. யாழ். வருவதற்கு விமானம் மூலம் காங்கேசன்துறைக்கு வந்த இருவர் 'மாகோ' கப்பலில் தரித்துள்ளனர். (யோ)

## க. பொ. த. (உ/த) பரீட்சை திங்கள் செய்முறை

(யாழ்ப்பாணம்)

1994 க. பொ. த. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான சங்கீத, நடன பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

நடன செய்முறைப் பரீட்சை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், சங்கீத பாடசெய்முறைப் பரீட்சை நல்லூர் கந்தசுவாமி கோவில் பின்வீதியில் அமைந்திருக்கும் நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையிலும் நடைபெறும் என யாழ். வலயம்-2 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## வட்டரீதியாக 13 நிலையங்களில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

இவ்வாண்டின் மாவீரர் நாளையொட்டிய மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நாள் இன்று ஆகும். அன்றைய தினம் தமிழீழத்தின் மாவீரர் பெற்றோர்கள் தமிழீழ மக்களின் கௌரவிப்பை ஏற்றுக் கொண்டும் தாம் பெற்றெடுத்த செல்வங்களுக்கு அவர்கள் துயிலும் இல்லங்களுக்குச் சென்று சுடரேற்றி அச்சுடரொளியில் தம் பிள்ளைகளைக் கண்டு வீர வணக்கம் செலுத்தும் நாள்

அந்த வகையில் தமிழீழ மக்களும் தம் தாயகமாம் தமிழீழத்தின் விடுதலைக்காய் தமது சுபீட்சமான வாழ்வுக்காய் தமது இன்னுயிரையீந்த அம்மாவீரரின் பெற்றோரிற்கு நன்றி செலுத்தி அம்மா வீரர்களுக்கு வீர வணக்கம் செய்து எழுச்சி கொள்ளும் நாள.

அந்த நாளாகிய இன்று பிற்பகல் 2-00 மணியிலிருந்து யாழ் மாவட்டத்தில வசிக்கும மாவீரர் பெற்றோர்கள் 13கௌரவிப்பு நிலையங்களுக்கு அழைத்துக் கௌரவிக்கப்படவுள்ளார்கள்

கோட்ட, வட்ட ரீதியாக அமைக்கப்பட்டுள்ள கௌரவிப்பு நிலையங்களின் விபரம் இங்கே தரப்படுகின்றது

### வலிகாமக் கோட்டம்

★ யாழ். வட்டத்தில்-யாழ். இந்துக் கல்லூரி.

★ நல்லூர் வட்டத்தில் கனகரத்தினம் மகாவித்தியாலயம்.

★ கோப்பாய் வட்டத்தில்- கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை,

★ உடுவில்/தெல்லி வட்டத்தில்- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி,

★ சண்டிலிப்பாய் வட்டத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் விசேட உரை

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே பிரபாகரன் அவர்கள் புலிகளின் குரல் வானொலியில் இன்றிரவு உரையாற்றவுள்ளார்- அவரின் இவ் உரை இரவு 11.48 நிமிடத்திற்கு நடைபெறவுள்ளது-

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா கொலை விசாரணை 7பொலிசார் இந்தியா பயணம்

(கொழும்பு)

ராஜீவ் கொலை வழக்கிற்காக மட்டக்களப்பிலிருந்து விசாரணைக்கென சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர் அவ்வழக்கில தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரின் விவாகப்பதிவை மேற்கொண்டவர் என தெரியவந்துள்ளது

விவாகப் பதிவாளரான முதியவர் ஒருவர் ராஜீவ் கொலை விசாரணைக்காக சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என முன்னர் செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

இதேவேளை இருவருடன் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஏழு பொலிசாரும் கூடச்சென்றுள்ளனர்

சிறிலங்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் குற்றவாளிகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தம் இல்லை எனினும் குண்டுவெடிப்புகள் தொடர்பாக இருதரப்பினரும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய முன்வந்துள்ளமையையே இது காட்டுகிறது என தெரிவிக்கப்படுகிறது.

## படுவான்கரை மக்களை வெளியேற இராணுவம் உத்தரவு பிறப்பிப்பு

### படை நடவடிக்கைக்கு முஸ்தீபு?

மட்டக்களப்பு படுவான் கரைப்பகுதியிலுள்ள வயல்வாடிகளில் தங்கியுள்ள பொது மக்களை ஒரு வார காலத்துக்குள் வெளியேறுமாறு இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்கவே இவ்வாறு மக்களை வெளியேறுமாறு படையினர் கோருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

படுவான் கரையானது மட்டக்களப்புக்கு மேற்கே காடுகளும் வயலும் உள்ள பகுதியென்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தேர்தலின் பின் சிறிலங்கா படையினரின் தேடுதல் நடவடிக்கைகளும் கைதுகளும் இப்பகுதியில் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## நூறு ஆண்டு வாழப் பாடுறோம்



நீபிறந்த நாளினிலே மழை பொழிந்தது.
நிலம்நனைந்து புதியதொரு முளை நிமிர்ந்தது.
தாயகத்து மேனியிலுன் கால் பதிந்தது.
தலைநிமிர தமிழருக்குப் பலம் பிறந்தது.
வாயெடுத்த குருவியெலாம் வாழ்த்துரைத்தது.
வந்தெழுந்தான் தலைவனென்று காற்றுரைத்தது.
தாய்பிறந்த மடியினிலே... தமிழ் பிறந்தது.
தலைவனென்ற பேருடனே புலி பிறந்தது.

குட்டிடவும் குனிந்தபடி நின்றிருந்தனம்.
கேட்கவொரு நாதியற்று நாமிருந்தனம்.
அட்டதிக்கும் அதிரவொரு ஒளி தெரிந்தது.
அலைகடலின் ஓரமதில் புயல் பிறந்தது.
தொட்டவனைச் சூடடிக்கும் வித்தை சொன்னவா!
துணிந்துநிற்க எங்களுக்குக் கற்றுத் தந்தவா!
கட்டிவாசப் பூவிலொரு மாலை சூடுறோம்.
கண்ணெதிரே நூறுஆண்டு வாழப் பாடுறோம்.

- புதுவை இரத்தினதுரை -

## சந்திரிகா அரசிற்கு பிரேமா மகள் பாராட்டு

(கொழும்பு)

சிறிலங்காவின் அரசியல் தலைவர்களது கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கென விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைக்க தற்போதைய அரசு எடுத்த நடவடிக்கையை பிரேமதாசாவின் மகள் துலாஞ்சலி ஜெயக்கொடி வரவேற்றுள்ளார்-

நேற்று மாலை சிங்கள பி-பி-ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி கமிஷன் அமைப்பதில் நடந்து கொண்ட விதம் தனக்கு பெருங்கவலையைத் தந்ததாகவும் தெரிவித்துள்ளார்-

## வெளியுறவு அமைச்சர் டிசம்பர் இந்தியா விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் டிசம்பர் 7-ம் திகதி இந்தியா செல்கின்றார்.

புதிய அரசின் பதவி ஏற்பின் பின் வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டு பங்களாதேஷிற்கும் இந்தியாவிற்கும் செல்கின்றார்.

எதிர்வரும் நான்காம் திகதி முதல் ஆறாம் திகதிவரை பங்களாதேஷிற்கு விஜயத்தை மேற்கொள்ளும் அமைச்சர் ஏழாம் திகதி இந்தியா செல்வார்.

அமைச்சர் கதிர்காமர் மூன்று நாட்கள் இந்தியாவில் தங்கியிருப்பார். இக்காலப் பகுதியில் அவர் இலங்கையின் அரசியல் நிலைவரம் குறித்தும் புதிய அரசின் வெளியுறவு

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. டி.பி மீதுநடவடிக்கை எடுக்க பொலிசார் முயற்சி

கொலை ஒன்று தொடர்பாக ஈ.பி. டி பி உறுப்பினர் சிலரை விசாரிப்பதற்கென நேற்று முன் தினம் பம்பலப்பிட்டி பொலிசார் ஈ. பி. டி பியின் அலுவலகத்தினுள் செல்ல முயன்றபோது அதை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மனிதரும் சமூக வாழ்வும்

சி. கா. செந்திவேல் எழுதிய மனித சமுதாய தோற்றம், வளர்ச்சி பற்றிய பதின்மூன்று ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் -வசந்தம் புத்தக நிலையம். (10202)

### சமூக மாற்றத்திற்கான அரங்கு

ஈழத்தமிழரிடையே சமூக மாற்றத்திற்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒரு நாடக ஆக்கவியல் ஆய்வு நூல் எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் வசந்தம் புத்தக நிலையம் (10203)

### நீரிழிவு ஔடதம்

நீரிழிவு நோயாளருக்கெனப் பாவிக்கக் கூடிய ஆட்டாமா, குரக்கன்மா, ஒடியல்மா, மற்றும் வறுத்த உழுந்துமா, பச்சை உழுந்துமா, தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். பெற்றுக் கொள்ளுமிடங்கள் அண்ணா கோப்பிக்கடை (யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில்) (சி - 10676)

### தவறிவிட்டது

திரு. க. துரைரத்தினம் (அதிபர், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி) என்பவருடைய அடையாள அட்டையும் (இல 39038032) மோட்டார் சைக்கிளுக்குரிய 1994ம் ஆண்டிற்குரிய வரி அட்டையும் (C 90 இல த 6630) சாவகச்சேரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்துமேற்படி உரிமையாளரிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (10206)

### சித்திர வகுப்புகள்

வட இலங்கை நுண்கலை மன்ற தேர்வுகளுக்குரிய வகுப்புகள் 28. 11. 94 (திங்கள்) மாலை 3 மணிக்கு ஆரம்பம் இல 6, பென்டிக்கோஸ் வீதி, கச்சேரியடி. (10209)

### அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரே வீட்டில் இருந்து மூன்று சைக்கிள்களைக் களவாடிய நபருக்கு யாழ்மாவட்ட நீதிமன்றினால் இரண்டாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு மாத சிறைத் தண்டனை விதிக்கப்படும். களவாடப்பட்ட சைக்கிள்கள் மீட்கப்பட்டு உரிமையாளரான கொழும்புத்துறையைச் சேர்ந்த ச. நாகேஸ்வரன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டன. இச் சைக்கிள்களின் பெறுமதி சுமார் இருபதினாயிரம் ரூபா என தெரிவிக்கப் படுகின்றது. (22)

---

## நினைவு கூருகின்றோம்...

### 26. 11. 1994

1985-ம் ஆண்டு மட்டு-இருதயபுரம் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் முற்றுகையின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

★ **ராஜா** (வின்சன்ட் - இருதயபுரம்-மட்டு)

1988-ம் ஆண்டு காரைநகரில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.சூரி** (மகாலிங்கம் சூரியகுமார் - காரைநகர்-யாழ்)

இதேபகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**குமார்** (சேகுதாவூது காசிம்-இரத்தினபுரம்-கிளிநொச்சி)

யாழ்-பெரியகோவிலடியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பெனி** (ஞானப்பிரகாசம் பெனி- 532, நாவலர் வீதி-யாழ்ப்பாணம்)

1989-ம் ஆண்டு மாதகல் பகுதியில் தேசவிரோதிகள் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.வெற்றி** (டேவிற் மரியன் அல்பேட்வின் வீ-சுழிபுரம்-யாழ்)

1991-ம் ஆண்டு மணலாறு-நெடுங்கேணிப் பகுதியில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய,

**சுபாஸ்கரன்-சுபா** (சுறுப்பன் கிருஷ்ணலிங்கம்-நெடுங்கேணி-மணலாறு)

1992-ம் ஆண்டு யாழ்-சில்லாலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**செங்கண்ணன்-பூவரசன்** (புஸ்பம் இளங்கிரன்-நல்லூர் (புங்குடுதீவு)

1993 ம் ஆண்டு பூநகரி-நாகதேவன்துறை இராணுவக் கடற்படைக் கூட்டுத்தளம் மீது "ஒப்பரேசன் தவளை" நடவடிக்கையின்போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**லெப்.செங்கதிர்-நிருபன்** (தம்பித்துரை மோகன் -காங்கேசன்துறை வீதி- யாழ்ப்பாணம்)

**2-ம் லெப்.ஈழவேந்தன்** (இராசரத்தினம் ராஜ்குமார்-மண்டைதீவு)

முல்லை மாவட்டத்தில் 17 11-93 அன்று சிறிலங்காவிமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் செங்கையன்-நிரஞ்சன்** (மகாதேவன் சுதாகரன்-மத்திய வீதி, உவர்மலை திருமலை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

★ இக் குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

சி-10774)

---

வடமாகாண

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு

## நிறுவனங்களின் சமாசம்

# மாவீரர்கள் நினைவாக

அ) அஞ்சலிகள் போதாது அணி அணியாய் அவர் வழியில் அஞ்சாது போராடத் துணி;

ஆ) தாயகத்தோடு சங்கமமே யாகிவிட்ட தூயவர்கள் மாவீரர் துதி.

இ) தன்னுயிரில் மேலாக தாயகத்தை நேசித்த மன்னவர்கள் மாவீரர் மதி.

ஈ) அன்னையர்க்கு ஆயுதப் போராகுமோ என்றன்று சொன்னவரைப் பழித்தாள் எம் சோதரி.

உ) எஞ்சியுள்ள பணியனைத்தும் எடுத்தலே மாவீரர் அஞ்சலிகள் ஆகும் அறி.

ஊ) வேங்கை அணியல்லாமல் வேறெவரும் இல்லையென்று ஒங்கட்டும் இங்கிருந்தோர் குரல்.

எ) பெற்றவரைப் போன்றே மாவீரர் பெற்றோரை பற்றோடு பேணுதலே பணி.

ஏ) பிறந்தாலும் மாவீரர் போலப் பிற - வாழ்ந்திங்கு இறந்தாலும் அவர் போல இற.

### அறிவித்தல்

எமது உரிமைகளை வென்றெடுக்க தமது உயிர்களைத் தற்கொடையாக்கிய மாவீரர் நாள் நவம்பர் 27 இல் எமது நிறுவனங்கள் விற்பனை நடவடிக்கைகளை நிறுத்தி கோட்ட மட்ட மாவீரர் நிகழ்வுகளில் அங்கத்தவர், பணியாளர், மகளிர் குழுக்கள் கலந்து கொண்டு மாவீரர் மாண்பினை நினைவில் கொள்வோமாக.

தலைவர்

வடமாகாண பனை தென்னை வள அபி. கூட்டுறவு, நிறுவனங்களின் சமாசம்.

(சி/10777)

---

# மாவீரத்தின் மகுடமாய் தமிழீழத்தின் சுவடுகள் பதித்தவர்



எங்கள் விடிவிற்காய்
தங்களை அர்ப்பணித்தோர்
தற்கொடை தந்துமே
அற்புதம் செய்தவர்
உணர்வுத் தீக்களை
உள்ளத்தே சுமந்தவர்
வெள்ளை மலரேந்திய
வேதங்கள் ஆனவர்
சத்திய வேள்வியில்
நித்தியம் வெந்தவர்
மாவீரத்தின் மகுடமாய்
தமிழீழத்தில் சுவடுகள் பதித்தவர்
இவர்களை வாழ்த்துவோம்
வணங்குவோம்
அவர்களின் உணர்வுகளை
முன்னெடுப்போம்

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## யாழ் மாவட்டம்

உறுப்பினர்களுக்கு

எம் தேச விடிவிற்காய் தம் இன்னுயிர் ஈந்த தற்கொடையாளர்களின் நினைவு வாரத்தின் இறுதிநாளான 27ம் தேதி (ஞாயிறு) வகுப்புக்களை நிறுத்தி உங்கள் நிறுவன ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் மாவீரர் நாள்விழாவின் எழுச்சியை உலகறியச் செய்யுங்கள்

(சி-10778) பொதுச் செயலாளர்

---

### திடீர் மரணம்

(தென்மராட்சி)

பளைப் பகுதியில் இருந்து விறகுப் பாரத்துடன் சைக்கிளில் வந்த ஒருவர் கைதடியில் தேநீர் கடை ஒன்றில் தேநீர் அருந்தி விட்டு சைக்கிளில் ஏறும் போது திடீரென மரணமானார். மரணமானவர் - இளவாலையைச் சேர்ந்த திரு: செல்லர் (வயது 65) என அறியப்படுகிறது. இவரது மரணம் தொடர்பாக சாவகச்சேரி காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (86)

### கண்டெடுப்பு

சோப்பாய் செய்தி தகவல் மையத்தினால் சில பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

09-05-94 இல் மட்டுவிலுக்கும் வண்ணாத்திப்பாலத்திற்கும் இடையில் நகை ஒன்றும் 24-06-94 இல் மட்டுவில் கோவிலுக்கும், கனகம்புளியடி சந்திக்கும் இடையில் ஆண்களின் கைக்கடிகாரம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது; உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-11-26**
**சனி இரவு**

08. 01 - மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி இ. இராஜேஸ்வரன் எழுதிய 'மாவீரர் இலட்சியங்கள் மாண்டு விடாது''
08. 25 - நேயர் கடிதங்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் - ந. கிருஷ்ணா எழுதிய ''மங்களத்திரு நாள்''
09. 00 மணிமுதல் 12 30 மணிவரை மாவீரர் தின சுடரேற்றும் வைபவத்தையொட்டி விசேட ஒலிபரப்பு
12. 30 மணிக்கு எமது விசேட ஒலிபரப்பு நிறைவுபெறும்.

**1994-11-27**
**ஞாயிறு காலை**

07. 02 மாவீரர்வணக்கம்
07. 15 களத்தில் மலர்ந்தவை
07. 30 செய்திகள்
07. 35 பத்திரிகைச் செய்திகள்
67. 40 மாவீரர்வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி- இ. இராஜேஸ்வரன் எழுதிய ''சுவடுகளில் தடம்பதிப்போம்''
08. 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள்யாவும் நிறைவுபெறும்.

---

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## 1995-ம் ஆண்டிற்கான

# கேள்வி அறிவித்தல்

### (01-01-1995 முதல் 31-12-1995 வரை)

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் சுழிபுரம்/வட்டுக்கோட்டை/சங்கானை/அராலி ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்ட இறைச்சி கடைகள்/சந்தைகளிற்கான சீல் வைத்த கேள்விகள் 16-12-1994-ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இவற்றிற்கான கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்ட மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணத்தையும் 15-12-94-ம் திகதி பி. பகல் 2.00 மணிவரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கிடைக்கப் பெறும் கேள்விப் பத்திரங்கள் 16-12-94-ம் திகதி மு பகல் 11.00 மணிக்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அடையாள அட்டை, குடும்ப அட்டை என்பவற்றுடன் சமுகமளிக்க வேண்டும். மேலதிக விபரங்களை பிரதேசசபை தலைமை அலுவலகத்திலோ அல்லது உப அலுவலகங்களிலோ அறிந்து கொள்ளலாம். நிபந்தனைகளை மீறுமிடத்து கேள்விகளைப் பின்போடவோ, ரத்துச் செய்யவோ எனக்குப் பூரண அதிகாரம் உண்டு. தொல்களம் சங்கானை உப அலுவலக ஒடக்கரையில் அமைந்துள்ளது: தொழுவம் சங்கானை உப அலுவலகம் முன் உள்ளது. கொல்கள கட்டணம் அப்போதைய காலப் பகுதிக்கு அமைவாக செலுத்தப்பட வேண்டும்.

### 1995 கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ள கூடிய ஆகக் குறைவு கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 1. சத்தியக்காடு சந்தை | 13,200 00 | 100.00 | 50 00 | |
| 2. பல்லசுட்டிச் சந்தை | 3,080 00 | 100 00 | 50.00 | |
| 3. தொல்புரம் மத்தியசந்தை | 500 00 | 100 00 | 50.00 | |
| 4. பொன்னாலைச் சந்தை (மூளாய்) | 1,900.00 | 100 00 | 50.00 | |
| 5. மாட்டிறைச்சிக் கடை | 8,800 00 | 100.00 | 50.00 | 50. 00 |
| 6. ஆட்டிறைச்சிக் கடை | 1,320.00 | 100 00 | 50 00 | 50. 00 |
| **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 1. பொது மரக்கறிச்சந்தை | 33,000.00 | 250.00 | 50.00 | |
| 2. மீன் சந்தை | 33,000.00 | 250.00 | 50.00 | |
| 3. கருவாட்டுக் கடை | 1,650.00 | 100.00 | 50 00 | 75. 00 |
| 4. மாட்டிறைச்சிக் கடை | 66,000.00 | 250 00 | 50 00 | 75. 00 |
| 5. ஆட்டிறைச்சிக் கடை | 11,000.00 | 100.00 | 50 00 | 75. 00 |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 1. பொதுச் சந்தை | 13,200.00 | 100.00 | 50.00 | |
| 2. மாட்டிறைச்சிக் கடை | 8,250.00 | 100 00 | 50 00 | |
| 3. ஆட்டிறைச்சிக் கடை | 16,500.00 | 100.00 | 50 00 | |
| **அராலி உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | 6,270.00 | 100.00 | 50.00 | |

வட்டுக்கோட்டை, அராலி மாட்டிறைச்சிக் கடைகளுக்கும் வட்டுக்கோட்டை ஆட்டிறைச்சிக் கடைக்கும் கேள்விக்காரர் கடைகளை தாமே ஒழுங்கு செய்து விபரங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்;

கா. சந்திரராசா
வலிமேற்கு பிரதேச சபை
சுழிபுரம்.

வலிமேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
சுழிபுரம்.
24.11.1994

(சி-10773)

# பேரினவாதம் விளைவித்த இடர்களை உடைத்தெறிந்தவர்கள் மாவீரர்கள்

## யாழ். மாவட்ட சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்

எத்தனை இடர்களை சிறிலங்கா பேரினவாதம் இழைத்தாலும் அவற்றை உடைத்து முன்னேறுகிறான் தமிழீழத் தலைவன் என முழு அகிலமும் வியந்துநிற்கிறது இந்த வெற்றிகளுக்கெல்லாம் அடிநாதமாக இருந்து வீரத்தின் ஈகத்தின் உச்சிக்குச் சென்றவர்கள் மாவீரர்கள். இவ்வாறு சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்க யாழ் மாவட்ட கிளை மாவீரர் நாளையொட்டி விடுத்த அறைகூவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறைகூவலில் தமிழீழ தேசியநாளாகியமாவீரர்நாள் நவம்பர் 27 ஆம் நாள் எமது தேசிய அபிலாசைகள் உள்ளக்கனலாய்க் குமுறி எழ வெங்களமாடி வித்தாகி விட்ட மாவீரர்களை நினைவு கூர்ந்து தமிழீழ மக்கள் அனைவரும் ஒருங்கிணையும் நாளாகும்.

நீண்டகாலமாக அந்நியருக்கு அடிமைப்பட்டிருந்தது எமது தாயகம், எமது பண்பாட்டில் சீர்குலைவு, எமது மொழியில் வேற்று மொழிக்கலப்பு, எமது பொருண்மியம் தங்குநிலை கொண்டமை, எமது தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் ஆகியவை எமது தாயகத்தில் இறைமை இழப்பின் விளைவுகள். "இழந்த இறைமையை மீட்போம் தமிழீழ தாயகத்திற்குப் போராடுவோம்" என குளுரைத்து நிற்கிறோம்; எமது தேசியத் தலைவரது வழிகாட்டலில் எமது விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

தமிழீழத் தலைவன் பிளவுபடாது. தொன்மையைப் புரிந்துகொண்டு, இன்றைய அறிவியல் வளர்ச்சியை உள்ளாக்கி முன்னோக்கிய பயணத்தை மேற்கொள்கிறான். எத்தனை இடர்களை சிறிலங்கா பேரினவாதம் இழைத்தாலும், அவற்றை உடைத்து முன்னேறுகிறான் என முழு அகிலமும் வியந்து நிற்கிறது. இந்த வெற்றிகளுக்கெல்லாம் அடி நாதமாக இருந்து வீரத்தின், ஈகத்தின் உச்சிக்குச் சென்றவர்கள் மாவீரர்கள். மாவீரர்கள் எமது மக்களின் மீது, எமது தாயகத்தின் மீது ஆழ்ந்த நேசம் கொண்டிருந்தவர்கள். எமது சுதந்திரமும், கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டியவை என செயற்பட்டவர்கள்.

மாவீரர் வாரத்தில், மாவீரரை நினைவுகூர்ந்து, மாவீரர் நிகழ்வுகளில் பங்குகொள்வோம். மாவீரர் ஆலயங்களுக்கு அணி அணியாகச் சென்று, மலர் சாத்தி அஞ்சலி செலுத்துவோம். நவம்பர் 26-ம் நாள் நள்ளிரவு வேளை தாண்டி புதிய நாள் உதிக்கும் 12 மணி 1 செக்கனுக்கு ஆலய மணிகள் எங்கும் ஒலிக்கட்டும்; "துயில் கொள்ளும் எமது புதல்வர்களே! உங்கள் மீது ஆணையாக, மீளவும் எமது விடுதலைப் போராட்டத்தில் எம்மை அர்ப்பணிக்கிறோம்" என மௌனமாக உறுதி எடுப்போம்! 12 மணி 2 நிமிடத்துக்கு, இல்லங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் அலுவலகங்கள் எங்கும் மாவீரர் சுடர் ஏற்றுவோம்! நவம்பர் 27-ம் நாள் நடைபெற உள்ள மாவீரர் நினைவு பொதுக் கூட்டத்தில் அணிதிரண்டு கலந்து கொள்வோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவீரர்கள் ஒவ்வொருவரது ஈகமும் பூசிக்கப்படவேண்டிய ஒன்றாகும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய மண் மீட்பு போரில் ஒவ்வொரு மாவீரனதும் பெறுமதி மிக்க உயிர் ஈகத்தினால் வெற்றிக்கம்பத்தை நோக்கி நகர்த்தப்படுகிறது; இவ்வாறு மாவீரர் வாரத்தை முன்னிட்டு வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடுகையில் இம் மாவீரர்கள் தங்கள் உயிர் ஈகத்தை ஒவ்வொரு வடிவத்திலே - தமிழ் தேசத்திற்காக தமிழ் மக்களுக்காக ஆர்ப்பணிக்கின்றனர். தரைப் புலியாக-கடற்புலியாக- கரும் புலியாக மாறி தம் இனிய உயிர்களை கொடையாக்குகின்றனர். இவர்கள் தன்னலம், தன் குடும்பநலம் ஆகியவற்றை முற்றாக நிராகரித்து தேசநலம், மக்கள் நலன் என்பவற்றிற்கே முன்னுரிமை கொடுத்து வாழ்பவர்கள். இவர்கள் மடிந்தும் மறையாதவர்கள். மறைந்தும் மறக்கப்பட முடியாதவர்கள். எமது நெஞ்சங்களிலும், இல்லங்களிலும் இருத்திப் பூசிக்கப்பட வேண்டியவர்கள். ஏனெனில் ஒரு மனிதனால் எந்தவொரு நோக்கத்திற்காகவும் கொடையாக வழங்க முடியாதது உயிர் ஒன்றே அந்த இனிய தன்னுயிரை எங்கள் ஒவ்வொருவருக்காகவும், ஈகமாக்கும் இம் மாவீரர்கள் வணங்கப் படவேண்டியவர்கள்.

சமகாலத்தில் எமது வாழ்வுகாலத்தில் ஏட்டிலோ... பாட்டிலோ... கற்பனைக் கதைகளிலோ இருந்து அறியாது எமது கண்முன்னே... எமக்காக தம்முயிரை ஆகுதியாக்கும் இவ் வீரர்கள் எம் தேசத்தலைவனின் "சுதந்திரம்" உயிரிலும் மேலானது" என்ற உயர்ந்த தத்துவத்தை வேதமாக ஏற்று இலட்சியப் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள். ஸ்ரீலங்கா பேரினவாத படைகள் எத்தனை மெருகூட்டலில் படை எடுத்தாலும் முறியடிக்க முடியும் என உறுதி தரும் இவர்களின் நினைவாக நிறுவப்பட்டுள்ள மாவீரர் ஆலயங்களுக்குச் சென்று மலரஞ்சலி செலுத்துவது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

கார்த்திகை 27ம் நாள் விடியலில் 12 மணி ஒரு செக்கனுக்கு ஆலய மணிகள் நினைவு ஒலி எழுப்ப 12மணி 02 நிமிடத்திற்கு, எம் இல்லங்கள் பாடசாலைகள், தொழிற்கூடங்கள், பொது அமைப்புகள், அலுவலகங்கள் அனைத்து இடங்களிலும் மாவீரர் சுடரேற்றி நமது தாயகம் நமதாக உறுதி பூணுவோமாக!

---

## மாவீரர் வாரத்தில் இவர்கள்

**டொமினிக் சாந்தன் - லெப். கணேஸ்**

பிறப்பு:- 05.08.1964 வீரச்சாவு:- 21.11.1986

★

**அன்ரன் தினேஸ்- 2-ம் லெப். தினேஸ்**

பிறப்பு:- 13.06.1969 வீரச்சாவு:- 27.11.1989

★

சதா நினைவுகூரும் குடும்பத்தினர்

அமைப்பு நண்பர்கள்.

(10187)

---

## பருத்தித்துறை பிரதேசசபை
## கேள்வி அறிவித்தல்

1995-ம் ஆண்டு

இறைச்சிக்கடைகள், சந்தைகள் குத்தகை

கேள்விப் படிவம் வழங்கல் - 05-12-1994 பி.ப. 3-00 மணிவரை

கேள்விப் படிவம் ஏற்றல் - 09-12-1994 பி.ப. 2.00 மணிவரை

கேள்விப்படிவம் திறத்தல்- 09-12-1994 பி.ப. 2-30 மணி

மேலதிக விபரங்களை பருத்தித்துறை பிரதேச சபையிலும், அதன் புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஆ. சிவசுவாமி
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை

பருத்தித்துறை பிரதேசசபை அலுவலகம்,
புலோலி 22-11-1994

(சி-10775)

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.
## சுத்திகரிப்பு/ பொதுத்தொழிலாளர் (அமைய)
## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது

தகைமைகள்:

01. கல்வி: 5-ம் வகுப்பில் சித்தி.
02. வயது: 18 வயது தொடக்கம் 45 வயது வரை.
03. யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும்,தமது தகைமைகளை நிரூபிக்கும்மூலச் சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் 03-12-94-ம் திகதியன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் பண்டார மாளிகை வளவில் அமைந்துள்ள மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம், 22-11-94

மாநகர ஆணையாளர். யாழ்ப்பாணம்.

(சி/10771)

---

## மாவீரர் நிதியம் ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நிர்வாக சேவையினால் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நிதியத்தின் ஆரம்ப விழா தமிழீழ வைப்பகத்தில் இன்று காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

## சிரமதானம்

விடுதலைப்புலிகள் மாணவரமைப்பின் ஏற்பாட்டில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களினால் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லமும், கைதடி செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து கொடுக்கப்பட்டது.

## மாவீரர்கள் நினைவு கூரல்

(நல்லூர்)

யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இன்று தமது சங்கப் பணிமனையில் உள்ள மாவீரர் முற்றத்தில் மாவீரர் நினைவு விழாவையும் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்த உள்ளது.

யாழ் ப. நோ. கூ. சங்கத் தலைவர் சொலமன் சூ சிறில் தலைமையில் இன்று மாலை 6. 30 மணிக்கு ஆரம்பமாக உள்ள இந் நிகழ்வின் வரவேற்புரையை யா. ப. நோ. கூ. சங்க வர்த்தக முகாமையாளர் செ. கனகநாயகம் அவர்களும் தலைமையுரையை சொலமன் சூ சிறிலும் நிகழ்த்துவார்கள் இந் நிகழ்வில் மாவீரர் மாண்புரைகள், விவாதஅரங்கு, இசையரங்கம் ஆகியன இடம்பெற உள்ளன.

மாவீரர் நினைவொலி நள்ளிரவு 12.00 மணிக்கும், மாவீரர் மௌன அஞ்சலி நள்ளிரவு 12 01ற்கும், மாவீரர் சுடர் ஏற்றல் நிகழ்ச்சி நள்ளிரவு 12. 02ற்கும் நடைபெற உள்ளன.

(17)

## குருதிக்கொடை அளிப்பு

மாவீரர் வாரத்தை முன்னிட்டு நோயாளர் நலன்புரி சங்கத்தின் அனுசரணையுடன் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் குருதிக் கொடை நிகழ்வு இடம் பெற்றது. இந் நிகழ்வில் கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளும் போதனாசிரியர்களும், எல்லாளன் விளையாட்டுக் கழக உறுப்பினர்களும், முத்துத்தம்பி மகா வித்தியாலய மாணவர்களும், பொது மக்களும் குருதிக்கொடை அளித்துள்ளனர்.

---

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை

(சுழிபுரம்,சங்கானை,வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகங்கள்)

1987-ம் ஆண்டின் 15 வது இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 134, 135 136, 137- ம் பிரிவின் கீழ் 1995 ம் ஆண்டிற்கு எமது பிரதேச சபை வரியிறுப்பாளர்களிற்கான ஆதனவரி பற்றிய

# அறிவித்தல்

1995 - ம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரமே அறவிடப்படும். ஆதனவரி அறவீட்டு விகிதமும் மாற்றமின்றி இருக்கும். 1995 ம் ஆண்டு முழுவதற்கும் உரிய வரித் தொகையை ஜனவரி மாதம் 31 ம் திகதிக்கு முன் செலுத்துவோரிற்கு 10% கழிவும் 1ம், 2ம், 3ம், 4ம் கந்தாயங்களுக்குரிய கட்டணங்களை முறையே ஜனவரி 31, ஏப்ரல் 30, யூலை 31, ஒக்டோபர் 31 க்கு முன் செலுத்துவோருக்கு 05% கழிவும் வழங்கப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம் கந்தாயம் | - 31 03 1995 க்கு | முன் | செலுத்தப்பட | வேண்டும்- |
| 2 ம் | " | - 30.06.1995 க்கு | " | " | " |
| 3 ம் | " | - 30.09.1995 க்கு | " | " | " |
| 4 ம் | " | - 31.12.1995 க்கு | " | " | " |

மேற் குறித்த கால எல்லைக்குள் ஆதனவரி செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15 % உம், வியாபார நோக்கத்திற்குப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20 % உம் பற்றாணை (தண்டம்) செலவாக அறவிடப்படும். இத் தொகை குறித்த காலத்தில் உரிய ஆதனவரி செலுத்தப்படாவிடில் வரியுடன் சேர்த்துக் கணிக்கப்படும்.

ஆதனவரி சம்பந்தமாக இவ்விளம்பரத்தைத் தவிர வேறு அறிவித்தல்கள் ஏதும் வழங்கப்பட மாட்டாது. ஆதன உரிமையாளர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு தங்கள் ஆதனத்தின் வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்-

மேலும், தங்கள் ஆதனத்தின் உரிமை தங்களால் மாற்றப்படும் போது அல்லது பிரிவிடுதல் செய்து வழங்கப்படும் போது எம்முடன் தொடர்பு கொண்டு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி எமது பதிவேடுகளில் பெயர்களை மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலதிக விபரங்களை உப அலுவலகங்களிலோ அல்லது தலைமை அலுவலகத்திலோ அறிந்து கொள்ளலாம்.

கா. சந்திரராசா
விசேட ஆணையாளர்,
வலி மேற்கு பிரதேச சபை

வலி மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்,
24. 11. 1994.

(சி/ 10772)

---

## சுவடுகளைச்சுமந்த இதயங்கள்

தியாகத்தின் உச்சத்தில்
காலம் செதுக்கிய சிற்பிகள் - மாவீரர்கள்
மரணத்தைக் கூட மகிழ்ச்சியோடு
தழுவிக் கொள்ளும் மாமனிதர்கள் ......
கல்லறைக்குள் உறங்குவதால்
எங்கள் கருவறைகளில் வீர உணர்வுகள்.
மரணத்தை வென்றதனால்
நீங்கள் மாவீரர்கள் ...........
சுதந்திரத்தின் எல்லைவரை பறந்து விட்ட
சுதந்திரப் பறவைகள் ... ... .
வல்லரசுகளால் வெற்றி கொள்ள முடியாத
உயிராயுதத்தின் உயிரோவியங்கள்
நீங்கள் மரணித்துக் கொண்டிருப்பதால்
நாங்கள் ஜனனமாகிக் கொண்டிருக்கிறோம்
உங்களின் சுவடுகளின் மேல்
எங்களின் இதயங்கள் .. ..............
சுதந்திரத்தின் எல்லைவரை ......

சி. ந. கு. சசிதரன்

---

## உள்ளத்தில் நிறைந்தவர்கள்

எத்தனை எத்தனை
யுகங்கள் சென்றாலும்
எம் உள்ளத்தில் நிலைத்துவிட்ட
நினைவுச் சின்னங்கள்

வாழ்நாளை அர்ப்பணித்து
வாகை சூடி களத்தில் மடிந்து
வரலாறு படைத்துவிட்டு இன்று
வானத்தில் மின்னும் நட்சத்திரங்களே

நாட்கள் ஓடிடலாம்
நாளை நாங்கள் மடிந்திடலாம்
எம் உள்ளத்தில் எழும் உணர்வுகள்
தமிழீழத்தைக் காத்திடும் ஆயுதங்கள்

வித்தாகி வீழ்ந்த மாவீரர்களே
நீங்கள் வீழ்ந்தவர்கள் அல்ல
எதிரியின் முன் எழுந்தவர்கள்
எங்கும் எழுச்சியுடன் திகழ்ந்தவர்கள்

வரிப்புலியாகி வரலாறு படைத்து
கரும்புலியாகி காற்றோடு கலந்து
கடற்புலியாகி கடலினில் எரிந்தவர்களே
உலகெங்கும் உங்கள் குரல்கள் ஒலிக்கின்றன

உங்கள் கனவுகள் நனவாகிடும்
உங்கள் ஆசைகள் நிறைவேறிடும்
வீழ்ந்த துப்பாக்கிகள் நிமிர்ந்திடும்
தமிழீழம் எம்கையில் எழுந்திடும்

மாவீரனாகி வீடுகள் தோறும்
ஒளிர்கின்ற அணையாத சுடர்களே
எம் தேசத்தைக் காத்தவர்களே
இன்று ஒலியாகி ஒலிக்கின்ற வேதங்களே

எம் தேசத்து நாயகர் நீங்கள்
எம் உள்ளத்தின் உணர்வுகள் நீங்கள்
சங்கீதத்தின் ஸ்வரங்கள் நீங்கள்
தமிழீழத்தின் வடிவங்கள் நீங்கள்

எம் உறுதிகள் என்றும் கலையாது
எம் உணர்வுகள் என்றும் அழியாது
நீர் நின்ற நிலைகளில் நிற்கின்றோம்
நீர் காட்டிய பாதையில் செல்கின்றோம்.

- ச. பிறியந்தி

---

## மா வீரரே! தெரிகிறது தானே

அடிமைத் தளையோடு,
எத்தனை காலமென்று,
மைந்தன் எழுந்தான!
விலைமதிப்பற்றது உயிர்,
ஆனால் விடுதலையோ,
உயிரினும் மேலானது,
விடுதலை என்றான்
வரலாற்று நாயகனே
நாம் வருகிறோம்
உயிரையே தருகிறோமென்று,
சென்ற செல்வங்களே!
காற்றோடு கலந்து
எமது மூச்சாகி விட்டீர்,
காயத்தைத்தான் கல்லறைக்குள்,
வைத்து மூடினோம்.
கருத்துக்களோடு கட்டுகியே,
கார்த்திகை மாதத்தில்,
மண்ணெங்கும் விழாவெடுத்து,
வணங்க விரும்பினோம்.
அதனால் நாடெங்கும்,
மாவீர ஆலயங்கள்,
ஆலயங்களுக்காக தேசமே
அலங்கரிக்கப்பட்டு நிற்கிறது
தேசத்து அழகை
ஜீரணிக்க முடியாது
அழகு தேவதையே
திகைத்து நிற்கிறாள்,
நாமோ ஆலயத்துள்
சூழ்ந்து நின்று
ஆராதித்து நிற்கிறோம்,
கல்லறை யருகினிலோ,
ஒலியெழுப்பி ஒளியேற்றி,
கண்ணீர்ப் பூச்சொரிந்து,
திதமிசைத்து நிற்கிறோம்.
மாவீரரே! நமிசப்பது,
என்னவென்று புரிகிறது தானே!
''விடுதலை'' பெறாமல்
ஓயோமென்பது தெரிகிறது தானே!

மீசாலையூர் கமலா

# மாவீரர் நினைவாக...


**STENO CENTRE**

வவினிச்சி அம்மன் கோயிலடி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

வடஇலங்கை
தொழில்நுட்பக் கல்லூரி

14, சென் பீற்றர்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

வட மாநில சுருக்கெழுத்து,
தட்டெழுத்து கல்வியகம்

58, பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்

ஞானோதயா கல்விநிலையம்

16/17, விதானையார் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம்
ரியூற்ரோறியல் கல்லூரி

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

ஸ்கூல் ஒஃப் பிஸ்னஸ்
அட்மினிஸ்ட்ரேஷன்

16, 3 ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்

யுனிக்கோ கணனி நிலையம்

37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்






மாவீரர்களே!
உங்கள் கரங்கள் ஏந்திய
துப்பாக்கி பார்த்த குறியை நோக்கி...
உங்கள் இதயம் சுமந்த
இலட்சியத்தை சுமந்தபடி...
நீங்கள் சுவாசிக்க நினைத்த
சுதந்திர காற்றை தேடிக்கொண்டு..
உங்கள் கண்கள் கண்ட
கனவுகளை நனவாக்க...
உங்கள் கால்கள் தேடிய
எல்லையை அடையும் வரை
உங்கள் வழியிலே நாங்களும்..




கலாலயா

(தொழிற் பயிற்சியகம்)

விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம்.

கணனி விஞ்ஞானக்
கல்வி நிலையம்

நாவலடி லேன்,
திருநெல்வேலி.

கனகசபை சகாதேவன்

இல. 6, இராமநாதன் வீதி,
கொக்குவில்.

புனித கதிரை மாதா
கல்வி நிலையம்

1, முதலியார் கனகசபை வீதி,
மானிப்பாய்.

C.T.I

லோட்டன் வீதி,
மானிப்பாய்.


யோகி ஹோம்
சயன்ஸ் அக்கடமி

நாயன்மார் வீதி,
நல்லூர்

பியூடோ என்ரபிறைசஸ்

39/17, மின்சார நிலையவீதி,
3-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

எஸ். ரி. சி. ஏ. தொழிற் கல்வியகம்
221 (229), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## தனியார் தொழிற்பயிற்சிக் கல்லூரிகளின் ஒன்றியம்

## யாழ். மாவட்டம்

(வி/10776)

சிந்தனைக்கு
அமைதி எல்லா வேளைகளிலும் களங்கமற்ற நன்மையின் அறிகுறியாகி விடாது.
-பொன் பிரபு

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 26-11-1994
தொலைபேசி:
ஆசிரிய பீடம் 035 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண் - 03

## அரசின் அக்கறை

"இரண்டாம் கட்டப் பேச்சுக்களை நடத்துவதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது."

"வடக்கு - கிழக்கு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் கைவிடவில்லை."

இவ்வாறான அறிவிப்புக்களை மட்டுமே தற்பொழுது இப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு தொடர்பான விடயத்தில் அரசாங்கத் தரப்பினர் விட்டு வருகின்றனர். அதிலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்விடயத்தில் மௌனம் சாதிப்பதாகவே தெரிகின்றது.

ஆனால், இவப்பிரச்சினை விவகாரத்தில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின் சந்திரிகா குமாரதுங்காவோ அலாது அரசாங்கமோ முன்னேற்றகரமான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவில்லை, எடுத்துக்காட்டாகப் பொருளாதாரத் தடையை சிறிதளவு தளர்த்துவதில் கூட அவர்கள் அக்கறை காட்டவில்லை.

மாறாக, இராணுவத்தை விமர்சித்துக் கொண்டே இராணுவத்திற்கான பெரும் நிதி ஒதுக்கீட்டைச் செய்து வருகின்றனர் எனலாம். இவ்வருட செலவீட்டின் குறை நிரப்பு பிரேரணையாக 530 கோடி ரூபாவைப் பாதுகாப்பு அமைச்சிற்கு ஒதுக்கிய பொ. ஐ முன்னணி அரசாங்கம், இடைக்கால வரவு செலவு திட்டத்திலும் ஏனைய துறைகளை விட இராணுவத் தரப்பிற்கே அதிகளவு நிதியை ஒதுக்கியது. அதாவது 4516 கோடி ரூபா வரவு செலவுத் திட்டத்தில், 566 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இத்தொகையானது இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் 12.5 வீதமாகும். இது இராணுவத்தின் வளர்ச்சியிலும், நலனிலும் சந்திரிகா அரசு கொண்டுள்ள அக்கறையையும், ஆர்வத்தையும் காட்டுவதாகவுள்ளது.

இந்நிலையானது, சந்திரிகா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பதில் கொண்டுள்ள ஆர்வத்தைப் பற்றிச் சந்தேகிக்க வைக்கிறது. சமாதானத்தில் அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருப்பின், இராணுவச் செலவீட்டிற்கு ஏன் இவ்வளவு பெருந்தொகை ஒதுக்க வேண்டும். என்பது எவராலும் எழுப்பப்படக்கூடிய கேள்வியே.

கடந்த காலத்தில் சிறிலங்கா இராணுவம் வீங்கிப் பெருத்துப் போனது உண்மைதான். இதன் காரணமாக கணிசமான அடிப்படைச்செலவீடு உண்டு என்பதும் ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான். ஆனால், ஒதுக்கப்படும் நிதியானது அதற்காக மட்டுமல்ல ஆயுத தளபாடக் கொள்வனவிற்கும் எனப் பெருந் தொகையில் அமைவதே முக்கியமானதாகும்.

அதாவது பேச்சுவார்த்தை குறித்த அறிவிப்புக்களை ஒருபுறத்தில் விடுத்துக் கொண்டே அரசாங்கம் மறுபுறத்தில் பெரும் ஆயுத தளபாடக் கொள்வனவில் இறங்கியுள்ளது எனலாம். அத்தோடு, புதிய படைப் பிரிவுகளை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றதெனலாம்; இதில் கடற்படைக் கப்பலுக்கு விமானப்படை மூலம் பாதுகாப்புக் கொடுப்பது தொடர்பான திட்டமும் அடங்கும்.

இந்தவகையில் பார்க்கும்போது சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கமும் 'கையில் பிரம்புடன் நிற்கும் சட்டம்பியார்' மாதிரியிலானதொரு அணுகுமுறையையே தமிழர் பிரச்சினையில் மேற்கொள்ள விரும்புவது போன்று உள்ளது. இதனை ஒருவகையில் மிரட்டும் பாணியிலானது என்றும் சொல்லலாம்.

ஆனால் இச்சிந்தனைப் போக்கினாலேயே கடந்த காலத்தில் ஐ. தே. க. அரசாங்கமும் இனப்பிரச்சினை விவகாரத்தில் தோல்வியுற வேண்டி வந்தது. ஆரம்பத்தில் பொலிஸ் மூலம், பின்னர் ராணுவம் மூலம், அதன்பின்னர் பொலிஸ், இராணுவம், கடற்படை, விமானப்படை இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் தோல்வி காண வேண்டி வந்தது; இதனைச் சந்திரிகாவின் அரசாங்கமும் மனதிற் கொள்ள வேண்டும்.

இதேசமயம் தமிழ் மக்களும் அரசாங்கத்தின் சமாதான அறிவிப்புக்களுடன் மட்டும் தமது கவனத்தை நிறுத்திக் கொள்ளக் கூடாது; அதற்கப் அப்பால் அரசாங்கத்தின் கவனம் எங்குள்ளது? அதன் செயற்பாடு எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிய முயல வேண்டும் இல்லாது போனால் மீண்டும் ஒருமுறை ஏமாற்றப்பட்டவர்களாக மாறிவிட வேண்டி வந்து விடலாம்.

# மாவீரர் லட்சியங்கள் வெற்றி பெறுவது நிச்சயம்

## இந்துமத குருபீடாதிபதி செய்தி

தமிழீழமெங்கும் மாவீரர் நாளை நாம் உணர்வு பூர்வமாகக் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். தன்னலமற்ற தியாகிகளே மனித தெய்வங்கள். இந்தத் தியாகிகளின் லட்சியங்கள் வெற்றி பெறுவது நிச்சயம்; நமது தேசத்தின் விடிவிற்காய் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த லட்சிய புருஷர்களை நன்றியுணர்வுடன் நினைவு கூர்ந்து போற்றுவோம்; இவ்வாறு இந்துமதகுருபீடாதிபதி மாவீரர்கள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பெற்றோரை உற்றார் உறவுகளைத் துறந்து தாய் நாட்டின்விடிவிற்கான தியாக வேள்வியிலே தம்மை ஆகுதியாக்கிக் கொண்ட நமது மாவீரர்கள் போற்றிப் புகழ்பட வேண்டியவர்கள். மாவீரர்கள் என்றும் சாவதில்லை. மரணம் இவர்களைத் தீண்டுவதில்லை. வீரசொர்க்கம் அடைந்தவர்களுக்கு சாவு ஏது? இவர்கள் தமிழீழம் எங்கும் மூச்சுக் காற்றாய் இருப்பார்கள். மக்கள் மனங்களில் தியாக தெய்வங்களாய் பூஜிக்கப்படுவார்கள். தமிழீழ வரலாற்று நாயகர்களாய் வாழ்வார்கள்.

எங்களது மாவீரச் செல்வங்களின் லட்சியக் கனவுகள் பலிக்க நவம்பர் 26ஆம் திகதி சகல இந்துமத ஆலயங்களிலும் நள்ளிரவு 12 மணிக்கு விளக்கு ஏற்றி ஒருகார மணி ஓசையை 2நிமிட நேரம் எழுப்பும்படி ஆலய நிர்வாகங்களையும், குருமார்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த மணி ஓசையில், நம்மைச் சூழ்ந்திருக்கும் அசுரப் படைகள் விலகி ஓடட்டும்; நன்மை கிடைக்கட்டும்.

எமது மக்கள் சுதந்திரமாக நிம்மதியாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நல்லாசிகள் தருகிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்களையும் மண்ணையும் காப்பவர்கள் மாவீரர்கள்

## யாழ் ஆங்கில மருத்துவ வர்த்தக சங்கம்

மாவீரர் வாரம் நவம்பர் 21-27 வரை இப் புனிதமான தினத்தை தமிழீழ மக்கள் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்:

இன்று வர்த்தகர்களும், மக்களும் தமிழீழத்தில் வாழ்வதற்கு வழி வகுத்தவர்கள் மாவீரர்களே.

மாவீரர்களுடைய வீரத்தையும், தியாகத்தையும், துணிவையும் கண்டு உலக நாடுகள் மூக்கின்மேல் கைவைத்து வியந்து நிற்கிறார்கள்.

தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும் காப்பதற்காக புறப்பட்டவர்கள் மாவீரர்கள்.

எங்கள் ஒளிமயமான வாழ்வுக்காக தங்களைத் தியாகம் செய்த மாவீரர்களை காலம் காலமாக நினைவுகூர்ந்து இப் புனித தினங்களை சிறப்பாகக் கொண்டாடுமாறு சகல தமிழீழ மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இன்று சின்னஞ்சிறு பால் மணம் மாறாதவர்கள்கூட தனது பாடசாலைகளில் மாவீரர் தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

இப் புனித தினம்தமிழீழத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை.

# மாவீரர் தின நிகழ்வுகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணிமனையில் சங்கத்தில் பணியாற்றும் மாவீரர் குடும்பங்கள் சங்க ஊழியர்களால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தமிழீழ மாவீரர் நாளான நாளை இந் நிகழ்வு இடம் பெறவுள்ளது. இதேவேளை இன்று பிற்பகல் 6 மணிக்கு சங்க தலைவர் முகனக சபை தலைமையில் மாவீரர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் இருபத்திநான்கு மணி நேரமும் அணையா தீபமேற்றி மாவீரர் உருவப்படங்கள் வைத்து பூசிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை யாழ் கல்விக் கோட்டத்தில் மாவீரர் தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாலை வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

மாவீரர்வாரத்தையொட்டி வடமராட்சி கோட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் துவிச்சக்கரவண்டியில் ஊர்வலம் சென்றனர்.

உடுப்பிட்டி, கட்டைவேலி, புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் துவிச்சக்கர வண்டியில் சிவப்பு, மஞ்சள் கொடிகளைத் தாங்கிய வண்ணம் இவ் ஊர்வலத்தில் சென்றனர்.

உடுப்பிட்டி, நெல்லியடியில் இருந்து புறப்பட்ட இவ் ஊர்வலம் மந்திகை, பருத்தித்துறையூடாக வல்வெட்டித்துறை திருவிலைச் சென்றடைந்தது. [யோ.17]

## மாவீரர் உருவப்படங்கள் கொட்டடியில்திறந்துவைப்பு

லெப். கலைப்பிரியன், வீரவேங்கை மாணவன் ஆகியோரது திருவுருவப்படங்கள் நேற்று முன்தினம் காலை 11.45 மணியளவில் கொட்டடி முத்தமிழ் வீதியில் கடற்புலிகளின் அரசியல்துறை (யாழ். மாவட்டம்) பொறுப்பாளர் திரு மு. வே. யோ. வாஞ்சிநாதன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நாவாந்துறை சிற்றூர்ப் பொறுப்பாளர் திரு, மதிவாணன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் ஈகச்சுடரை வலிகிழக்கு வட்டப் பொறுப்பாளர் திரு, தேவநேசன் ஏற்றிவைத்தார்.

கடற் புலிகளின் அரசியல் துறை (யாழ் மாவட்டம்) பொறுப்பாளர் திரு மு. வே. யோ. வாஞ்சிநாதன் முத்தமிழ் சன சமூக நிலையத் தலைவர் திரு. ப. சந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பெற்றோரும், உறவினரும் மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு மாலை அணிவித்தனர்.

# அரசியல் விளம்பரங்களுக்கு கூட்டுத்தாபனநிதிபயன்பாடு

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அரசியல் ரீதியான விளம்பரங்களை வெளியிடுவதற்கு கூட்டுத்தாபனங்கள தமது பணத்தைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

அண்மையில் இலங்கைவங்கி காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தொலைத்தொடர்பு கூட்டுத்தாபனமான சிறிலங்கா ரெலிகொம் போன்றவை ஜனாதிபதி திருமதிசந்திரிகா, பிரதமர் திருமதி சிறிமாவோ ஆகியோருக்கு வாழ்த்து தெரிவிக்கும் முகமாக பத்திரிகைகளில் வெளியிட்ட விளம்பரங்கள் தொடர்பாக சர்ச்சைகள் எழும்பியபோது இது தெரிய வந்துள்ளது.

ராவய பத்திரிகையில் சிறிலங்கா ரெலிகொம் கூட்டுத்தாபனம் ஜனாதிபதி திருமதி சந்திரிகாவை வாழ்த்தும் முகமாக ஒரு முழுப்பக்க விளம்பரம் அண்மையில் பிரசுரமானது தெரிந்ததே.

இது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னான செய்தியாளர் சந்திப்பின்போது கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது பதிலளித்த தபால் தொலைத்தொடர்புகள் துறை அமைச்சர் மங்கள சமரவீர கூறுகையில் கூட்டுத்தாபனங்கள் தமது நிதியை அரசியல் விளம்பரங்களுக்கு பயன்படுத்த அனுமதிக்கும் தீர்மானம் அமைச்சரவையில் கடந்த 17-ல் எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

எனினும் இத்தகைய விளம்பரங்களுக்கு அரசாங்க நிதியை பயன்படுத்தக்கூடாது என்று ஜனாதிபதி திருமதி சந்திரிகா கேட்டுக்கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# வடக்கு - கிழக்கு பிரச்சினையால் பங்குச் சந்தையில் வீழ்ச்சி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தொடரும் பிரச்சினைகளால் கொழும்பு பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டு முதலீடுகள் அண்மைக் காலத்தில் குறிப்பிடத்தக்க விதத்தில் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என சுதந்திர வர்த்தக வலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை அரசு தனது தெளிவான பொருளாதார கொள்கையை வெளியிடாமல் இருக்குமானால், வெளிநாட்டு முதலீடுகளுக்கான வாய்ப்புகள் கணிசமானளவு குறைவதை தடுக்க முடியாமல் போகக் கூடுமென நிதியமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# தம்மையே ஆகுதியாக்கிய அக்கினிதீபங்கள் மாவீரர்கள்

## மனோ

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புப் போரிலே தம்மை ஆகுதியாக்கிய அக்கினித் தீபங்கள் தான் மாவீரர்கள் இவர்களுக்கு கௌரவம் கொடுத்து தேசியத்தின் இறைமையை கட்டிப் பாதுகாக்கின்றோம் இவ்வாண்டு கடந்த கால நிகழ்வுகளை நினைவு கூருவது போன்று தமிழீழமெங்கும் இது கொண்டாடப்படுகிறது. இவ்வாறு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்றமாவீரர் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அரசியல் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த மனோ குறிப்பிட்டார்

அவர் அங்கு மேலும் கூறுகையில்

இன்று இக் கல்லூரியில் நீங்கள் உங்கள் நன்றிக் கடன்களை செலுத்துகின்றீர்கள் ஒவ்வொரு நாடும் தமது விடுதலைக்குப் போராடிய வீரர்களை கௌரவித்து தேசிய வீரர்கள் தினத்தைக் கொண்டாடுகின்றது நாம் பலபடி முன்னிலையில் மாவீரர் நாளை அனுட்டிக்கிறோம். ஏனெனில் விடுதலை வீரர்களின் தியாகத்தை அவர்களது வீரத்தை வெளிக் கொணர்வதற்குஏதுவாக இந் நாட்கள் அமைகின்றன எனவும் தெரிவித்தார்.

# சவூதி தூதுவராலயம் கொழும்பில் திறக்கப்படும்

சவூதி அரேபியாவின் தூதுவரகம் ஒன்று விரைவில் கொழும்பில் திறக்கப்படவுள்ளது. இத் தகவலை வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் இதற்கான கட்டிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும், அதிலுள்ள திருத்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் பத்து வாரங்களினுள் இவ் அலுவலகம் திறக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் றியாத்திலுள்ள இலங்கைத் தூதுவர் அமைட் இங்கு திருப்பி அழைக்கப்படலாம் எனவும், பிரபல முஸ்லிம் கல்லூரி ஒன்றின் அதிபர் ஒருவர் றியாத்திற்கான தூதுவராக நியமிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

# பொலிஸ் படை சீரமைப்பு உயரதிகாரிகள் இடமாற்றம்

சிறிலங்கா பொலிஸ் படை முற்றாக சீரமைக்கப்பட இருப்பதாகவும் இதன் முதற்கட்டமாக உயர் பொலிஸ் அதிகாரிகள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டு வருவதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பொலிஸ் படையில் செய்யப்படும் சீரமைப்பு வேலைகள் யாவும் ஜனாதிபதியின் பணிப்பின் பேரிலேயே மேற்கொள்ளப்படுவதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர்அனுருத்த ரத்வத்த கொழும்பு தினசரியொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

பொலிசாரின் மேலுள்ள அதிகார துஷ்பிரயோகங்களும் ஊழல் குற்றச்சாட்டுக்களும் தீவிரமாக விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புலமைப் பரிசில் முடிவுகள் எப்பொழுது வந்து சேரும்?

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒகஸ்டில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த 19ஆம் திகதி கொழும்பில் வெளியாகியும் யாழ் மாவட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இன்னமும் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவில்லை.

இப்பரீட்சைப் பெறுபேறுகளை இங்கு எடுத்துவருவதற்கு யாழ் கல்வித்திணைக்களம் எதுவித நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளதாக தெரியவரவில்லை,

இதனைத் தொடர்ந்து பரீட்சை எழுதிய மாணவர்களும் பெற்றோர்களும் ஆழ்ந்த கவலையடைந்துள்ளனர்.

இத்துடன்வடபகுதிநோக்கி ஒரு கப்பல்கள் கொழும்பில் இருந்து புறப்பட்டு இங்கு வந்திருந்தும் இப்பெறுபேறுகளை இங்கு எடுத்துவருவதற்கு ஒழுங்குகள் செய்யப்படாமையினால் இப்பெறுபேறுகளின் வருகை மேலும் தாமதமாகலாம், என தெரியவருகின்றது. (பா) (நி)

## கூட்டம்

சங்கானை கல்விக்கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று 28-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் பாரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

## வரவுசெலவு திட்டம் நிறைவேறியது

சந்திரிகா அரசின் இடைக்கால வரவுசெலவுத் திட்டம் நேற்று பாராளுமன்றில் 58 அதிகப்படி வாக்குகளால் நிறைவேறியது. 1995 ஆம் ஆண்டின் முதல் மூன்றுமாத காலப் பகுதிக்கு 4879கோடி ரூபா இதில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் பாதுகாப்பு செலவிற்கென 566 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகளவு நிதி ஒதுக்கீடு பெற்ற அமைச்சு பாதுகாப்பு அமைச்சு என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்டெடுப்பு

கண்டிக்குளி பாடசாலைக்கு முன்பாக பெண்களின் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

★ ★

ஆனைப்பந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் சிறுதொகைப் பணத்துடன் பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## வகுப்புக்கள்

தென்மராட்சிக் கல்விக் கோட்டம் நடாத்திவரும் பிரவேச பண்டித, பாலபண்டித, பண்டித வகுப்புக்கள் டிசம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

யாழ்/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில், பிற்பகல் 3.00 மணிக்கு மேற்படி வகுப்புக்களின் தொடக்கநாள் நிகழ்வுகள் நடைபெறும்.

இவ் வகுப்புக்களில் கற்க விரும்பும் மாணவர்கள் கோட்டக்கல்வி அலுவலகத்தில் அல்லது டிறிபேக் கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## உயர் தொழில் ஆங்கிலம்

உயர் தொழில் ஆங்கிலம் கற்கை நெறிக்கு இதுவரையாக பதிவு செய்யத் தவறியவர்கள் இன்றும் நாளையும் தொடர்ந்து பதிவு செய்யலாம் என்பவதை யாழ். பிராந்திய இயக்குனர் ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

## மீனவர் காயம்

வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் தொழிலுக்குச் சென்ற சில மீனவர்கள் கைகால்களில் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர். கடலில் தொழில் செய்துகொண்டிருந்த போது கடும் காற்று கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு இவர்களது வள்ளங்கள், படகுகள் கடலில் சரிந்ததினால் மீனவர்கள் முருகைக் கல்லுடன் உரசுப்பட்டு காயமடைந்தனர்.

வல்வெட்டித்துறை, பொலிகண்டிப் பகுதி மீனவர்களே இவ்வாறு காயமடைந்தனர். (யோ)



சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் ஆலயத்தில் மக்கள் வரிசையாக மாவீரர் உருவப்படங்களுக்கு அஞ்சலி செலுத்த காத்திருப்பதை முதலாவது படத்திலும வடமராட்சியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் வளைவு ஒன்றை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## கிரான்பாஸ் குண்டு வெடிப்பு

# காயமடைந்த தமிழர் வழங்கிய தவறான முகவரி

(கொழும்பு)

கிரான்பாஸ் குண்டு வெடிப்பில் காயமடைந்த வத்தளையைச் சேர்ந்த தமிழர் ஒருவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சையை பெற்று வெளியேறிய பின் அவர் அளித்த முகவரி போலியானது என தற்போது பொலிசார் கண்டுபிடித்துள்ளனராம்.

குண்டு வெடிப்பில் காயமடைந்து சிகிச்சை முடிந்து வெளியேறிய 94 பேரில் மேற்படி நபரின் பதிவே தவறாக உள்ளதால்இவரை தறபோது பொலிசார் தேடிவருகின்றனர்

## தலைவர்

இதேவேளை புலிகளின் குரல் வானொலி நிகழ்ச்சிகள் இன்று இரவு 9.00 மணி தொடக்கம் அதிகாலை12 30 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது- இதில் 12.00 மணிக்கு மாவீரர் நினைவை அனுஷ்டிப்பதற்கான மணிஒலி எழுப்பப்படும் 12 02ற்கு மாவீரர் துயிலுமில்ல பாடல் ஒலிபரப்பப்படும்- விசேட நிகழ்ச்சிகளாக மாவீரர் நாள் சிறப்பு நிகழ்ச்சி, இசையரங்கம், கவிச்சித்திரம், வில்லிசை என்பன இடம்பெறும்-

## மீன்பிடி

ஈடுபட்ட மீனவர்கள் கூறினர்.

நெஞ்சைத்தொடும் சுலோகங்களைஏந்தியவாறுஅவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன·

## செயற்குழுகூட்டம

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுக் கூட்டம் இம்மாதம் 28-ம் திகதி கட்சிக் காரியாலயமான சிறிகொத்தாவில் நடைபெறவுள்ளது. கட்சியின் தலைமைப் பதவியை ரணில் விக்கிரமசிங்கா ஏற்றதன் பின்னர் நடைபெறும் செயற்குழு கூட்டம் இது வென்பது குறிப்பிடத்தக்கது

## வெளியுறவு

கொள்கை குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என சிறிலங்கா வானொலி தெரிவித்தது. பேச்சுக்களில் பொருளாதார உறவு குறித்தும் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய ஜனாதிபதி, பிரதமர், வெளியுறவு அமைச்சர், நிதியமைச்சர், வர்த்தக அமைச்சர் ஆகிய இந்தியத் தலைவர்களை சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

## ஈபிடிபி

அக்குழுவினர் தடுத்து நிறுத்தினர். இதையடுத்து பொலிசார் தமது முயற்சியைக் கைவிட்டு திரும்பினர். மேலதிக பொலிசாரை அங்கு அனுப்புவது தொடர்பாக தற்போது பொலிசார் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை கோரியுள்ளனர்.

# தொழில நிறுவனங்களின் பாதிப்புக்கள் மதிப்பீடு

வடக்கு-கிழக்கிலுள்ள கைத்தொழில் நிறுவனங்களுக்கு கடந்த காலங்களில் அனர்த்தங்கள் மூலம்ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பீடு செய்வதற்காக தொழில் துறை மேம பாட்டு நிறுவனத்தினரால் இந்தநிறுவனங்களின் உரிமையாளர்களிடமிருந்து விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன் பொருட்டு சகல கைத்தொழில் நிறுவனங்களும் திருநெல்வேலி 230, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள தொழில்துறை மேம பாட்டு நிறுவனத்துடன் எதிர்வரும் 30-ம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## வட்டாரீதியாக

தில்- மானிப்பாய் மெமோறியல் கல்லூரி,

★ சங்கானை வட்டத்தில்- வட்டு: யாழ்ப்பாணக்கல்லூரி,

### தென்மராட்சிக் கோட்டம்

★ கைதடி வட்டத்தில்- கைதடி முத்துக் குமாரசாமி வித்தியாலயம்,

★ சாவகச்சேரி வட்டத்தில்- சாவகச்சேரி இந்துக்கல்லூரி,

★ கொடிகாமம்/பளை வட்டத்தில்- உசன் இராமநாதன் கல்லூரி,

### வடமராட்சிக் கோட்டம்

★ பருத்தித்துறை வட்டத்தில்· புற்றளை மகாவித்தியாலயம்,

★ கரவெட்டி வட்டத்தில்- கரவெட்டி ஞானாசாரியார் வித்தியாலயம்,

★ உடுப்பிட்டி வட்டத்தில்- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

### தீவகக் கோட்டம்

யாழ். இந்து மகளிர் கல்லூரி-

மேற்படி கௌரவிப்பு நிலையங்களுக்கு இன்று மாலை 4-00 மணிக்கு முன்னதாக யாழ் மாவட்டத்தில் வசிக்கும் சகல மாவீரர் பெற்றோர்களையும் தத்தமது வட்டங்களின் கௌரவிப்பு நிலையங்களுக்கு வந்து சேருமாறும் அன்போடும், ஆதரவோடும் யாழ்- மாவட்ட அரசியல் துறையினர் அழைப்பு விடுகின்றனர்-

## நினைவொலி

ருந்து மாவீரர் நினைவாக சுடரேற்றுவர்.

நாளை பல்மாவட்டரீதியாகமாவீரர்நினைவுப் பொதுக்கூட்டம் நடைபெறும். இப்பொதுக் கூட்டத்திற்கு பெருமளவு மக்கள் பங்கேற்கவுள்ளனர். இக் கூட்டத்திற்கு சமுகம் தருமாறு பலவேறு அமைப்புகளும் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈகச்சுடர்

பொதுமக்களும் துயிலும் இல்லத்தினுள் அனுமதிக்கப்படுவார்கள்.

துயிலும் இல்லத்திற்கு வணக்கம் செலுத்த வருவோர் வசதிகருதி பிரதான பாதையில் இருபுறங்களிலும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்களும் மோட்டார் வாகன தரிப்பு நிலையங்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. எனவே சகலரும் அதனுள் தங்கள் வாகனங்களையும், துவிச்சக்கர வண்டிகளையும் நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மேலும் வாகனங்களும், மோட்டார் சைக்கிள்களும் அவை நிறுத்தப்படும் வீதிகளை ஒருவழிப் பாதையாக மட்டும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

மாவீரர் பெற்றோர்கள், அவர்களிற்கென ஒதுக்கப்பட்ட பாதையினூடாக துயிலும் இல்லத்தை வந்தடைந்து தங்கள் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளிற்கும், நினைவுக் கற்களிற்கும் சென்றடையக் கூடிய வகையில் துயிலுமில்ல ஒழுங்கமைப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். அவர்கள் மேலதிக விபரங்களை துயிலுமில்ல நுழைவாயிலில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் பெற்றோரை ஏற்றி இறக்கும் வாகன ஒழுங்கமைப்பு செய்வதற்காக செல்வபுரம் சனசமூக நிலையத்தில் அலுவலகம் செயற்படும். பெற்றோர் பலாலி வீதி வழியூடாக கணேசலிங்கம் (அன்சார்) வீதி வழியாக அழைத்துச் செல்லப்படுவார்கள்.

எனவே மேற்படி ஒழுங்குகளை சகலரும் கடைப்பிடித்து மாவீரர் நாள் நிகழ்வினை-புனிதத்தினை பேணி ஒத்துழைக்குமாறு யாழ்.மாவட்ட அரசியல் துறையினால் விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது;


கிராமிய நிதியம் அறிமுகப்படுத்தும

மாவீரர் சோலை

# சேமிப்புத் திட்டம்

நீங்களும்

பல இலட்சங்களுக்கு அதிபராகலாம்

எந்த ஒரு வங்கியும் வழங்காத வட்டியை இத் திட்டத்தில் முதலீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளுங்கள்.

பெற்றோர்களே உங்கள் குழந்தைகளின் உறுதியான வாழ்வுக்கு உரமிடுங்கள்.

மாவீரர்களின் நாட்டை பசிய ஆடைகளினால் போர்த்துங்கள்.

முதலீடு ஐயாயிரம்

முடிவில் 10 லட்சம்

மேலதிக விபரங்கள் நாளை ஈழநாதத்தில்

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(சி-10788)



யாழ். மாவட்ட

நகைத்தொழிலாளர் சங்கம் விடுக்கும்

அன்பான வேண்டுகோள்

மாவீரர் நாள்

## வீரவணக்கக் கூட்டம்

27-11-1994 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ் இலுப்படிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் அணிவகுப்பு ஊர்வலத்திலும் அதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவிருக்கும் வீரவணக்கக் கூட்டத்திலும் அனைத்து தமிழீழ மக்களும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு சங்கத்தின சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

- யா/மா. நகைத்தொழிலாளர் சங்கம்

(சி-10785)



## வேண்டுகோள்

எமது வணிகர் கழக எல்லைக்குட்பட்ட சகல வணிகப் பெருமக்களுக்கும் யாழ் வணிகர் கழகம் விடுக்கும் பணிவான வேண்டுகோள்.

எதிர்வரும் மாவீரர்தினத்தன்றுநள்ளிரவு12.00மணிக்கு எமது மண்ணுக்காகவும், மக்களுக்காகவும்தம் உயிரைத்தியாகம் செய்த மாவீரர்களுக்கு அஞ்சலியைசெலுத்துமுகமாக சகல வணிக நிலையங்களிலும் தீபம் ஏற்றி அஞ்சலியை செலுத்துமாறு சகல வணிகப் பெருமக்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்று மாலை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு சகல வணிகர்களையும் ஊழியர்களையும் பொதுமக்களையும் கேட்டுக்கொள்கிறோம்

(சி/10783)

- தலைவர்



50-வது நாளை நோக்கி

யாழ்

ஸ்ரீதர் அரங்கத்திரையில்

முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும்

பொ. தாசனின்

# "இன்னும் ஒரு நாடு"

தினசரி பிற்பகல் 2 30, 4.00, 6.00

சனி, ஞாயிறு காலை 10 30, 4. 30, 6.30


சனி, ஞாயிறு தினங்களில் 2 30 இற்கு மட்டும்

ஒக்டோபர் 'ஒளிவீச்சு 94'

தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசு பேச்சு வார்த்தைலெப். கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12வீரவேங்கைகளின் விவரணம். 2-ம் லெப். மாலதியின் 7-வது ஆண்டு நிகழ்ச்சி மற்றும், விடிவு' என்னும் குறும்படம் ஒளிவீச்சில் இடம் பெறுகின்றன.

(சி-10787)


## 6-ம ஆண்டு நினைவஞ்சலி



### திரு. சின்னத்துரை குணரத்தினம்

(கிருஸ்ணா கொன்ஸ்ரக்ரேஸ், கிருஸ்ணா மரஅரிவு ஆலை, கிருஸ்ணா ரான்ஸ்போட்டேஸ், அரச மரக் கூட்டுத்தாபன ஒப்பந்தகார பங்காளன்)

மண்ணில் 27 . 01 . 1956

விண்ணில் 01 . 12 . 1988

திதி: 26 . 11 . 1894

ஆண்டு ஆறு சென்றாலும் அழியாது உன்நினைவு!
இன்பமாய் வாழ்ந்திட்ட இனிய நாள் இனி வராதோ!
ஈன்றெடுத்த தாயையும், உன் பாசமிகு தங்கையையும்
உன்னருகே அழைத்திட்டாய்!
ஐக்கியமாய் கூடிவாழ்ந்து புகழாரம் ஏந்திடவே!
பொறுக்காத கொடியவர்கள் சதி கை கூடிற்றே!
ஆண்டு ஆறு அல்ல ஆண்டாண்டு சென்றாலும்!
நீங்கள் எமது இதயத்தில்தான்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

"விஸ்ணுமகால்" பளை.

சேமண சின்னத்துரை குடும்பத்தினர்

(10211)

## மரண அறிவித்தல்கள்



### திரு· ஆறுமுகம் முத்துக்குமாரு

ஓய்வு பெற்ற தபால் ஊழியர் ஆறுமுகம் முத்துக்குமாரு (யாழ்-மன்னார்- அடம்பன்) நேற்று முன்தினம் காலமானார். அன்னார் மோட்சானந்தத்தின் கணவரும், சேகர் (பொறியியலாளர்), காலஞ்சென்ற தினகர் (காகித ஆலைக் கூட்டுத்தாபனம்) வாழைச்சேனை), மனோகர் (பசீர்க்காக்கா - ஈழநாதம் வன்னிப்பதிப்பு), திருமதி சாந்தி தெய்வேந்திரன், திருமதி சுகந்தி யோகராசா (ஆயிசா), ஜெயரத்தினம், அசோகர் (நிலான்), வசந்தி, ஜெயந்தி, (கனுஜா - செஞ்சோலை), ஆனந்தி (ஆசிரியை, செஞ்சோலை) ஆகியோரின் தந்தையும், தெய்வேந்திரனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாத்திரியார் வீதி, அரியாலையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று இன்று காலை 10-00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

நண்பர்களும், உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

சாத்திரியார் வீதி,
அரியாலை,
(இ)

தகவல்:
மு. பசீர்க்காக்கா
[மகன்]

### திருமதி இராயப்பு றோசம்மா

சில்லாலை தெற்கு சென் ஜேம்ஸ் வீதியைச் சேர்ந்த திருமதி இராயப்பு றோசம்மா 24- 11- 94-ல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை இராயப்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி றேமுந்துப்பிள்ளை தம்பதிகளின புதல்வியும, காலஞ்சென்றவர்களான பார்பரம்மா, சீமாம்பிள்ளை, சத்தறீனம்மா, மாக்கிறேற் மற்றும் சந்தியாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பம், ராணி, பேபி, அருட்சகோதரி ஜெம்மா (திருச்சிலுவைக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்), லீலா, பரமானந்தம் (பஞ்சரட்ணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், பிலிப்பையா, இம்மனுவேல், ஸ்ரீபன், சின்னத்தம்பி (தார்சீசியஸ்), அல்வின் (பபா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பபா, றதி, றெஜி, பபி, அருட்சகோதரி டொறின் (திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்), ரவி, விஜி, கிறேசியன், லூமின், வுளோறின், லைங்ஸ்ரன், கிளின்ரன், சுஜி, றஜோ, ஜெனி, ஜெகன், ஜெலோன் ஆகியோரின அன்புப் பேர்த்தியுமாவார்.

பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக இன்று (26- 11- 94) காலை 9 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித-யாகப்பர் ஆலயத்தில் திருப்பலிப் பூசையின் பின்பு பண்டத்தரிப்பு - புனித யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
பரமானந்தம (பஞ்சரட்ணம்)
(மகன்)
பெறாமகன் எட்வேட் பங்கிராஸ்

(சி-10786)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;